**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII–Code of Criminal Procedure)**

**PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS COURT, PALANI.**

**Sessions Case No. 57/2022**

**Prosecution – PW11 / LW12**

**Deposition of witness for : Defence**

**Court**

**Name** : **திரு.கார்த்திக்**
**Father's Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 07-10-2025

எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் பழனி 13 வார்டு, தாடகையம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சிவசங்கர், பரமசிவம், முருகன், அன்புசெல்வன், ஈஸ்வரி, பாப்பாத்தி ஆகியோர்களை எனக்கு தெரியும், அவர்கள் என் பக்கத்து தெருவை சார்ந்தவர்கள். தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 10 ஆண்டுக்கு முன்பு பரமசிவத்திற்கு கத்திக்குத்து காயம் ஏற்பட்டது. திருவிழாவின் போது கா யம்ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன், முழுவிபரம் தெரியாது. எந்த இடத்தில் காயம், என்ன விதமான காயம் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154-இன் கீழ் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>

07.03.2012ம் தேதி 11.30 மணிக்கு எங்கள் ஊரில் ரத ஊர்வலம் நடந்தது என்றும், அதில் நான் கலந்துகொண்டேன் என்றால் ஆமாம், கலந்து கொண்டது உண்மைதான். அந்த ரத ஊர்வலத்தில் எதிரிகள் பெண்பிள்ளைகளை கேலி செய்தார்கள் என்றும், அதை பரமசிவம் தட்டிக்கேட்டார் என்றால் ஆமாம், கேள்விப்பட்டேன். அதன்தொடர்பாக தான் பரமசிவத்தை எதிரி சலிம் என்பவர் கத்தியால் குத்தினார்

என்றும், அந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை, கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு தெரியும் என்றும், நான் நேரடியாக பார்த்தேன் என்றும், போலிசார் விசாரணையில் அந்த சம்பவத்தை சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.